திருச்சிற்றம்பலம்

# மெய்ப்பொருள் நாயனார்

திருத்தொண்டர் புராணம் யாத்த சேக்கிழார் ஸ்வாமிகள் இளையாங்குடி மாற நாயனார் வரலாற்றினைத் தொடர்ந்து அப்பெரியாரின் துணை கொண்டே மெய்ப்பொருள் சேதிவேந்தன் செயலினை விளம்பலுற்றேன் என்று மெய்பொருள் நாயனாரின் வரலாற்றை நம்முன் வைக்கிறார்.

சேதி நாட்டின் திருக்கோவலூர் எனும் திரு நகரந்தன்னில் மன்னிய ஆட்சி செய்து வந்த வழிவழியாய் வந்த மலாட மன்னரான மெய்ப்பொருளார், வேத நெறியின் உண்மைத் தன்மை எதுவும் வழுவாமல் இவ்வுலகில் நிலை பெறச் செய்யும் அடியார்கள் பால் கொண்ட மிக்க அன்பினால் அவர்தம் உள்ளக் கருத்தை அறிந்து உண்மை அன்பின் காரணமாக அவர்களுக்கு ஏவல் செய்து வந்தான்.சிவனடியார் பெருமக்களின் தவவேடமே சந்ததமும் சிந்தையில் கொள்ளும் தன்மையர்.தமது நாயகனுக்கு தொண்டுமேற்கொள்ளும் அடியார் தாளல்லாது வேறு சார்பு இல்லாதவராய் விளங்கினார்.அடியார் தம்மிடம் வந்தபோது அவர் கூடிய மகிழ்ச்சி பொங்க குறையாது கொடுத்து வந்தார்.




இங்கனம் சைவநெறி பிறழாது ஒழுகி வருங்கால் இவரிடம் அழுக்காறும் பகையும் கொண்ட மன்னன் ஒருவன் இவரை வெல்லும் ஆசையால் போர் மேவி வந்து தமது ஆள், அம்பு,சேனை,யானை எல்லாவற்றையும் இழந்து படுதோல்வியடைந்தான்.தோல்வியும் அவமானமும் அவனை அதிக வெறி கொள்ளச்செய்தது. எவ்வழியிலேனும் மெய்ப்பொருளாரை கொல்லவோ, வெல்லவோ

செய்து தன் பகை முடிக்க வேண்டும் என்ற பொல்லா எண்ணத்தைக் கொண்டிருந்தான். வாக்கினால் சொல்லவொண்ணர வஞ்சனை எண்ணங்களை நெஞ்சினில் தேக்கி வைத்துக்கொண்டு திருக்கோவலூர் சேர்ந்தான் முத்தநாதன் என்ற அந்த எத்தன்.

சிறந்த தவக்கோலத்தை வலிந்து பூண்டு வந்த அப்பகை மன்னன் மேனியெங்கும் வெண்ணீறு அணிந்து, சடை முடி தரித்து கையில் புத்தகங்களைச் சுமந்து கையிலே படையையும் மறைத்து நஞ்சினும் கொடிய தனது வஞ்சம் நெஞ்சில் மட்டுமே என்ற நிலையில் முகம் திருத்தி சேதி நாட்டு மன்னன் மெய்ப்பொருளாரின் மாளிகை வாயில் வந்து சேர்ந்தான்.வழியெல்லாம் உள்ள வாயில்கள் எல்லாம் காத்து நின்ற வாயிலோர்கள் சுத்த தவம்பூண்ட அடியார் என்று முத்த நாதனை நினைத்து தம் நாட்டு மன்னனின் சிவச்சிந்தனைகளை மனத்தில் நினைந்து எத்தன் முத்தனை எழுந்தருளுமாறு வரவேற்றனர். இறுதி வாயிலோன் தத்தன் மட்டும் முத்த நாதனை வழிமறித்து "எம் மன்னன் துயில் கொள்ளும் வேளையிது" எனவே அவரைத் தற்போது காண இயலாது என்று தடுத்தான் முத்த நாதனோ வாயிலோயா, நான் மெய்ப்பொருளாருக்கு மெய்மைத் தத்துவத்தின் திடம் உரைக்க வந்துள்ளேன். ஆகவே என்னைத் தடுக்காதே என்று மீறிக் கடந்து உள்ளெ புகுந்தான். அங்கே அரிதுயிலில் ஆழ்ந்திருந்த மன்னனையும் அருகே அமர்ந்திருந்த எழிலாள் மாதரசியையும் கண்டான். அடியார் கோலத்தில் வந்திருந்தவனைப் பார்த்ததும் அரசியார் மன்னனை எழுப்பலுற்றார்.

எழுந்த மன்னனும் தரையில் விழுந்து வந்தவரை வணங்கினார். வந்திருந்த முத்தநாதனோ எம்பெருமான் அருளிய எங்கும் கிடைக்கப் பெறாத ஆகம நூல் ஒன்றினை உமக்களிக்கவே யாம் இங்கு வந்தோம் என்று கூறினான். மகிழ்ச்சியுற்ற மெய்ப்பொருள் மன்னனும் இது யாம் பெற்ற பேறு என்று புளகாங்கிதம் உற்றான். மன்னா இச்செம்பொருள் உண்மையினை உமக்கு யாம் உரைக்கின்ற போது உமது தேவியார் இங்கு இருக்காலாகது என்றுரைக்க அரசியும் அகன்றனள். நாயனார் வந்தவரைத் தக்க இருக்கையில் அமரச் செய்து தாம் தரையில் அமர்ந்து தலை தாழ்ந்து தயாரானார். புத்தகக் கட்டுக்களை அவிழ்ப்பது போல் பாவனை செய்த வஞ்சகன் முத்தநாதன் தான் மறைத்து வைத்திருந்த படையினால் மெய்ப்பொருளாரை வீழ்த்தினான். வெட்டுப்பட்ட மன்னனும் வெகுளாமல் உண்மைத் தவவேடமே உண்மை மெய்ப்பொருளாகும் என்று கூறி சாய்ந்தார், எத்தன் முத்தன் உள்ளே நுழைந்தவுடனேயே அவனது செயல்பாடுகள் மீது ஐயப்பாடு கொண்ட தத்தன் உடனேஅவ்விடம் வந்து, ஓங்கிய வாளால் முத்த நாதனை வெட்ட முயன்றான் வீழ்ந்து கொண்டிருந்த மன்னன் தன் கரம் நீட்டி தத்தனைத் தடுத்தான். " தத்தா இவர் நம்மவர்" எனக் கூறி அவன் செய்ய முனைந்த செயலைத் தடுத்தார்.

மன்னனின் ஆணையை அப்படியே ஏற்றுக் கொள்பவன் அடிமை தத்தன், தரையில் வீழவிருந்த தம் தலைவனின் தலையைத் தன் கரத்தால் தாங்கிப் பிடித்துக் கொண்டு இனி நான் செய்வது என்னவென்று துயரத்துடன் வினவினான். எம்பிரானானின் அடியாரான இவர் தம் வழியேச் சென்று நமது நாட்டைக் கடந்து செல்லும் வரை இவருக்கு தீது யாதும் எதிரிடாமல் காவல் மேற்கொண்டு அனுப்பி வைப்பாயாக என்று மன்னவன் கூறினான். மன்னவன் இட்டக் கட்டளையை எற்று தத்தனும் அக்கொடியவனைக் காவல் காத்து அழைத்துச் சென்றான். செய்தி கேட்ட அனைவரும் நாம் இனி செய்வது யாதெனின் இச்செயலைச் செய்த கொடியவனைக் கொல்வது ஒன்றே எனக் கருதிஆயுதமேந்தி எதிர்ப்பட்டனர். தத்தன் மன்னரிட்டக் கட்டளையாக கூறி அவர்களைத் தடுத்து அப்புறப்படுத்தினான். அக்கொடியவனை ஆள் அணுக முடியாதக் காட்டில் கொண்டு விட்டு விட்டு வந்த தத்தன் மன்னரின் அடிகளை வணங்கி நின்றான். "இன்று எனக்கு ஐயன் நீ செய்தது யார் செய்யவல்லார்" என்று மன்னரும் தத்தன் செயலைக் புகழ்ந்து கூறி அவனை நோக்கி நிறைபெருங்கருணை கூர்ந்தார். தனது அரசின் பின்னோடிகளுக்கும் தம்மிடம் கொண்ட காதலால் வருந்தும் தேவிமார், மற்றும் சுற்றத்தார்களுக்கும் பொருந்திய செய்தியைக் கூறுவாராய் " விதியால் பரவப்பெற்ற விபூதியிடத்து சோர்வு இல்லா பக்திகொண்டு தொண்டு செய்வீராக என்று கூறிவிட்டு மன்றுளார் பூங்கழல்களைச் சிந்தை செய்தார்.இம்மெய்ப்பொருள் மன்னன் பலநாளும் சிந்தித்தது

*போன்றே சிவச்செம்பொருளும் விடைமீது தோன்றி திருக்காட்சியருளி அடியாரைத் தம் அடியின் கீழ் சேர்த்துக் கொண்டு சிவானந்தப் பெரும் பேற்றை அருளினார்.*

*இன்னுயிர் செருக்கக் கண்டும்*

*எம்பிரான் அன்பர் என்றே*

*நன்னெறி காத்த சேதி நாதனார்*

*பெருமைதனைப் போற்றுவோம்.*

*(சேக்கிழார் சுவாமிகள்).*